முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பத்ரகிரியார் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

07.05.2019, செவ்வாய்க்கிழமை

1. **ஞான சூட்சுமமே அரங்கராசா**
**ஞானிகளை வணங்கும் தவராசா**
**வானவர் துணைபட அன்னதானம்**
**வள்ளலாய் செய்து வரும் குருராசா**
2. அரசனே உன் பெருமை கூறி
அறிவிப்பேன் நித்ய பிரசன்ன ஆசி
தரணியிலே **விகாரி தகர் திங்கள்**
**தக்க அறுநான்கு திகதி குசன் வாரம்**
**(விகாரி வருடம் சித்திரை மாதம் 24ம் நாள் 07.05.2019, செவ்வாய்க்கிழமை)**
3. **வாரமதில் பத்ரகிரியார் யானும்**
வழங்குவேன் உலகோர் நலம் பெற
திறமான தொண்டர்கள் படை
தேசமெங்கும் அரங்கன் உருவாக்கி
4. ஆக்கியே ஞான சேவையை
அறம் தருமமாக செயல்படுத்த
ஊக்கமுடன் வாழ்வில் உயர
உண்மை ஆன்மீகம் கண்டு தேற
5. தேறவே கலிகால மக்களே
தேடி வாரீர் அரங்க ஞானியை
தேறவே அரங்கன் சீடர்களின்
துணை கூட்டி தருமத்தில் உதவி
6. உதவியே ஞானிகள் பூசையில்
உயர்வாய் கலந்து ஆசி பெற
பூதலமெங்கும் அரங்கன் பெருமை
பிசகில்லா பரப்பி வருக
7. வருகவே மக்களுக்கு பாதுகாப்பு
வரமென வல்லமை பெருகும்
தருமவழி இணைந்து நன்கு
தன்னார்வ தொண்டர்களாகி வர
8. வருகவே மக்களுக்கு பக்குவம்
வந்தடையும் திடம் மனபலம்
முருகப்பெருமான் அருளும்
முழுமை ஞானமும் வந்தடையும்
9. அடையவே அரங்கன் காட்டும்
அருள் ஞான வழிகள் தன்னை
தடையற தொடரும் மக்களே
தருமயோக வாழ்வில் இடம் பெறுவர்

10. இடம் பெறுவதுடன் அரங்கன் காட்டும்
ஏற்றமிகு ஞானயுகத்தில்
தடையற பதவி சுகம் என
தனித்துவம் பெற்றும் சிறப்பர்

11. சிறப்பு தரும் அரங்கா வாழ்க
செயம் தரும் அரசா வாழ்க
மறுப்பின்றி உன் மார்க்கம் ஏற்க
மரணம் வெல்வர் உலக மக்கள்

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் பத்ரகிரியார் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

ஞானத்தின் சூட்சும வடிவமே ஆறுமுக அரங்கமகா தேசிகனே ஞானிகளை வணங்கி மக்களையும் ஞானிகளை வணங்கச் செய்து ஞானவழி நடத்திச் செல்லும் ஞானியே தவராசனே அரங்கமகா தேசிகனே. ஞானிகளின் துணையுடன் அளவிலாது அன்னதானத்தினை செய்து வருகின்ற வள்ளலே, வள்ளல் ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலன் கருதி விகாரி வருடம் சித்திரை மாதம் 24ம் நாள் 07.05.2019, செவ்வாய்க்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே பத்ரகிரியார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பத்ரகிரியார்.

வல்லமைமிக்க தொண்டர்களை நாடெங்கும் அரங்கமகா தேசிகனார் உருவாக்கி நாடெங்கும் ஞானசேவையை அறப்பணிகளாகவும், தொண்டுகளாகவும், தருமங்களாகவும் செயல்படுத்தி வருகின்றார். அவரவரும் ஊக்கமும், ஆக்கமும் பெற்று வாழ்வினில் உயர்வடைய உண்மை ஆன்மீக நெறியில் வந்து கடைப்பிடித்து தேறிடவே கலிகால மக்களே உத்தம மகா ஞானி அவதார ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரைத் தேடி வாரீர் வாரீர், ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலிற்கு. வந்துமே உலகினில் சேவையாற்றும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருள் சீடர்கள் ஆற்றும் அறப்பணிகளுக்கு துணையாய் நிற்பதுடன் அரங்கரின் தர்மங்களில் தொடர்ந்து பொருளுதவிகள் செய்தும் வருவதுடன், ஞானிகளை முன்னிறுத்தி நடத்துகின்ற ஞானபூசைகளில் தவறாது கலந்து அருளாசிகளை பெற்றிட வேண்டும். உலகமெங்கும் யுகமாற்ற ஞானி ஆறுமுக அரங்கரின் வருகையை தெரிவித்தும் அரங்கரின் அற்புதங்களையும் புகழையும் பரப்பி வர வேண்டும்.

இவ்விதமே செயல்பட மக்களுக்கு உயர்வான அருள்பாதுகாப்பு உண்டாகி வரங்களாக அவரவரின் வல்லமைகள் பெருகிடும். அரங்கர் ஆற்றும் தானதருமப் பணிகளிலே தன்னலமற்று கலந்து தொண்டுகள் செய்தும் பொருளுதவிகளைச் செய்தும் வரவர, அரங்கன் தொண்டு கலந்து உதவிய மக்களுக்கு பக்குவங்கள் எல்லாம் தாமே வந்தடையும், மனோதிடமும் மனோபலமும் சிந்தை தெளிவும் உண்டாகும்.

அரங்கரின் அருளைப் பெற ஆறுமுக அரங்கமகா தேசிகனார் காட்டும் தூய ஞானவழிகளை தடையேதும் இன்றி உளமார ஏற்றுக் கொண்டு தவறாது பின்பற்றி வருகின்ற மக்களே, அரங்கரின் அருளாசிகளைப் பெற்று தருமலோக வாழ்வினில் இடம் பெறுவார்கள். ஆறுமுகப் பெருமானால் உருவாக்கப்படுகின்ற உயர்வுமிக்க ஞானயுகத்திலும் இடம் பெற்று தடையேதும் இன்றி பதவிகளையும் பதவி சுகங்களையும் பெற்று தனித்துவம்மிக்க நிலையை அடைவார்கள்.

**எல்லா சிறப்புகளையும் தந்தருளும் அரங்கா வாழ்க வாழ்க, எல்லா வெற்றிகளையும் தந்தருளும் ஞானஅரசனே வாழ்க வாழ்க, சந்தேகம் இன்றி மறுப்பில்லாமல் அரங்கரின் உண்மை ஞானமார்க்கத்தை ஏற்கும் மக்களே, மரணத்தை வென்று மரணமிலாப் பெருவாழ்வினை பெறுவார்கள்** எனக் கூறுகிறார் மகான் பத்ரகிரியார்.

–சுபம்–